# அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

**விழுப்புரம், செப்.23:** விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு, தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணிக்கு தகுதியானோர் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

விழுப்புரம் மாவட்ட வேலை வாய்ப்பு, தொழில்நெறி வழி காட்டு மையத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணி நிரப்பப்பட உள்ளது.

கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 1.7.2022 அன்றைய தேதியின்படி, எஸ்.சி., எஸ்.டி., எஸ்.சி.(ஏ) பிரிவினர் 37 வயது வரையும், பி.சி., எம்.பி.சி., பி.சி.(எம்) 34 வயது வரையும், ஓ.சி. பிரிவினருக்கு 32 வயது வரையும் வயது வரம்பாகும். இந்தக் காலியிடம் இன சூழற்சி பொதுப் போட்டி பிரிவில், கரோனா தொற்றிலோ அல்லது இதர காரணங்களாலோ தாய், தந்தை என இருவரையும் இழந்தவராக இருக்க வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரர்கள் விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு, தொழில்நெறி வழிகாட்டு மையத்தை நேரில் அணுகி விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம். நிறைவு செய்த விண்ணப்பங்களை வருகிற 30-ஆம் தேதிக்குள் விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு, தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். வருகிற 30-ஆம் தேதிக்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் படாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Tamilancareer.com
Tamilancareer.com
Tamilancareer.com